Volume: 02 Issue 02 Aug: 2023

களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies
E-ISSN : 2456-5148
www.ngmtamil.in

# காதாசப்தசதியும் கட்டவிழ்ப்பு நோக்கும்

**சு.தமிழ்ச்செல்வன்**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர் - 610005

## முன்னுரை:-

சமூகம் சரிவர இயங்கிடவும் இயங்காது தன்னையே அழித்திடவும் சமவுரிமை, சமவுரிமை இன்மையே காரணமாய் அமைகிறது, இதில் ஆண் பெண் என்பவர்கள் உறுப்புகளில் வேறுப்பட்டோரே தவிர உணர்வுகளில் ஒன்று பட்டோரே, இதையறியாது கற்பு என்றும் நற்பால் ஒழுக்கம் என்றும் நடுநிலை தன்மை தளர்த்தி ஒருதலையாக கட்டமைத்து உள்ளதை காதாசப்தசதி பாடல் வழியே நாம் அறியலாம்.

## இலக்கணிகள்:-

இலக்கணிகள் பல காரணம் பொருட்டு கட்டமைப்பினை பாதுகாத்து வருகின்றனர், கட்டமைப்புகளை கட்டவிழ்த்து நடுநிலை செய்ய வேண்டி இங்கே நாம் செயல்பட வேண்டி உள்ளன.

**" மாறுதல்களோடு கூட மரபு வழி வருகையே பரிணாமம்"(1)**

என்ற டார்வின் கூற்று வழி கட்டமைப்பு என்பது காலத்திற்கு காலம் மாறக்கூடிய தன்மை உடையது, ஒரு கால கட்டமைப்பில் மையமாக இருந்து இன்பம் கண்டோர் அதையே தக்க வைக்க வேண்டி கட்டமைப்பு தளராது.பாதுகாத்து வருகின்றனர். எனவே மையமும் விளிம்புநிலையும் தலைகீழாக ஆக்காது: தற்காலிகமாக ஆக்கவே நாம் இங்கு செயல்பட வேண்டும்.

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**

**வழுவல கால வகையி னானே"(2)**

என்று முனிவர் உரைப்பினும் மையத்தில் இருப்போர்.ஆளுக்கு ஓர் நீதியை வரையறை செய்து.அதிலேயே கால காலமாக தங்களை முன் நிறுத்தி பிறரை விளிம்பில் வைத்தே தங்களின் அரசியல் அறிவினை,

வெளிக்காட்டுகின்றனர். அறிவு அரசியல் யாவையும் தங்களை.தாங்களே மையப்படுத்தி கொள்ள கட்டைமைப்பு செய்ததுவே.

**”கோதுறும் உளமுடை கொழுந்தன் இயல்பை**

**குடும்ப வாழ்க்கை குறைப்படற் கஞ்சி**

**கோல மேனி சால மெலியும்**

**கொண்க னிடமும் கூறிட மாட்டாள்”(3)**

குடும்பம் என்ற கட்டமைப்பு உடையாது பாதுகாக்க வேண்டி கொழுந்தன் பார்வை செயல் தவறாக இருப்பினும் அதை வெளிக் காட்டாத படி, பெண் அதே நேரம் கற்பு என்ற கட்டமைப்பினை பாதுக்காக்க போராடும் போராட்டம் இங்கே புலனாகிறது, இதன் மூலம் ஆண்கள் தன்னை மையமாகவும், பெண்ணை விளிம்பு நிலைக்கு தள்ளி கால காலமாக கட்டமைப்பு செய்வதையும் உணர முடிகிறது.

**”ஆண்மகனுடைய அமுக்கி வைக்கப்பட்ட அழுத்தி வைக்க வேண்டிய எதோ சிலவற்றின் குறியாக, அடையாளமாக,பெண் இருக்கிறாள்”(4)**

நிறையுடைய பொருள் தன்னைவிட நிறைக் குறைந்த பொருளை தன் பாதைக்கு வளைப்பது போல இங்கே மையம் விளிம்பினை வளைக்கிறது. மையமும் விளிம்பும் இயல்பிலேயே உருவாகியது இல்லை. ஆனால் மனித அதிகார சிந்தனை இவ்வாறு உருவாக்கி இன்பம் காண்கிறது. அதிகாரம் தன்னை நிறையுள்ள தன்மையிலேயே தக்க வைக்க தனக்கு உகந்த கட்டமைப்பினை கட்டுமைப்பு செய்துள்ளது. இதை இங்கே காதாசப்தசதியில் உணரலாம் காதாசப்தசதி பாடல்களில் மூன்று காரணிகளாக அதிகார கட்டமைப்பினை வெளிப்படுத்துவதை இங்கு காணலாம்.




காதாசப்தசதி (503) பாடல்கள்

(மரபு,கற்பு,குடும்பம்)

**”முதுமை படினும் உருவெழில் கெடினும்**

**வறுமை பட்டு வாடி னாலும்**

**கற்புடைய மகளிர் பொற்புடை மனத்தில்**

**கொழுநர்பால் நேயம் செழுமை யுறுமே”(5)**

## குடும்பமும் கட்டமைப்பும்:-

கற்புடைய பெண் என்பவள் கணவன் அழகு கெட்டு முதுமை ஏய்தும் போது அவனை விட்டு பிரியாது இருப்பாள் இதுவே கற்புடைய மகளிர்க்கு சிறப்பு என அமைந்த பாடலில் இங்கே தனது இன்பம் இளமை அனைத்து இழந்தே கற்பு என்ற இல்லாத பொருளை இருப்பதாக கட்டமைப்பு செய்து பெண்ணை தன் கட்டுப்பாட்டில் ஆண் வைக்க முற்படுவதை காணலாம். இங்கே கற்பு என்பதை மையமாக எடுத்து கொண்டாள்

**”மையம் என்பது செயல்பாட்டினை முடக்குவதாகவும்**

**இயங்க வைப்பதற்கு முடிவதாகவும்” (6)**

உள்ளதனை அறியலாகிறது. பிற ஆடவனை நாடாது தன்னையே நாடுவாய் என்ற அமைப்பிலும், தன்னை சார்ந்தே தனக்காகவே இயங்கும் தன்மை உடையவராக இருக்க வைக்கிறது கட்டமைப்பு. இதை தலைகீழாக மாற்றி அமைப்பதை விட தற்காலிகமாக ஆக்குவதே கட்டவிழ்ப்பின் நோக்கம் எனலாம்.

**”இயல்பு புணர்ச்சி இதய களியான்**

**மாறுபா டுறினோ மனத்தில் ஐயுறுவான்**

**கூறுவாய் தோழி கொண்கணுக்கே**

**இன்ப மெவ்விதம் இயற்றுவ தறியேன்”(7)**

## கற்பு கட்டமைப்பு:-

காமம் குறித்த ஞானம் பெண்ணிற்கு உரியது அன்று . அவ்வாறு அறிந்தால் அவள் கற்பில்லாதவலா என்ற ஐயம் தோன்றும். இங்கே பெண் தன் உணர்வு அடக்கி தன் ஆசைகளை அடக்கி. கற்பினை நிலைநாட்ட வேண்டி உள்ளது. எனவே கணவனிடம் கூட தன் ஆசையை சொல்ல முடியாத படியே இங்கே கட்டமைப்பு இதைவிட கொடுமை பல் வெளியே தெரியா வண்ணம் சிரிப்பது . மீறினால் கற்பில்லாதவள் இவள் என முத்திரை குத்தி மையம் மையமாக இருக்கிறது. விளிம்பை விளிம்பிலேயே வைக்கிறது,

**”எழிற்பல் தோன்றா இளநகை யோள் சொலும்”(8)**

காதாசப்தசதி பாடல்களில் பெருபாலும் கற்பு என்ற பெயரில் மையம் தன்னை தக்க வைக்க முயல்வதை காண இயலும் எனினும் இங்கே பெண் விளிம்பில் உள்ளதன் மூலம் கட்டமைத்தோர் யார் என்பதை அறியலாம். கணவன் இல்லா நேரம் வேறு ஆடவனை நாடும் நாயகி என்ற பொருளில் அமைந்துள்ளது சில பாடல்கள் அவை வெளிப்படுத்தும் தன்மையும் பரத்தை இல்லம் சென்ற தலைவன் பாடல்களுள் வெளிப்படும் தன்மையும் வெவ்வேறு அவை மைத்திற்கும் விளிம்பிற்கும் உள்ள தொலைவு எனலாம்.

**”தோகை மயிலென துவளுறும் கூந்தலோ**

**ஆகம் நடுங்குற அரைவிழி மூடிய**

**மோக நாயகி முனைப்புற ஆண்நிகர்**

**வேக மதில்விளை களைப்பினை விளக்குவாய்”(9)**

பெண் தன்னை ஆணாக நினைத்து புணர்ச்சி செய்வது பும் பாவரதி என்று வட நூலார் உரைப்பர் , இத்தகைய பாடல்கள் தமிழில் இல்லை, இல்லை என்பதாள் இல்லையென ஆகாது. இருந்து நீக்கியும் இருக்கலாம்,

## முடிவாக:-

இங்கே முடிவு என்பது முடிவு அல்ல ஒன்றின் தொடக்கம் பாடல்களில் பெண்கள் விளிம்பாக ஆண்கள் மையமாக உள்ளது. இதை பாடலின் பொருள் மூலம் உணரலாம். எனவே கட்டமைப்பு இல்லாத கட்டமைப்பினை கட்டமைப்போம்,மீண்டும் மீண்டும் காலம் அதை கட்டவிழ்க்கும் காலத்தின் கருவிகள் நாம் இதை செய்யலாம்.

## சான்றெண் விளக்கம்:-

1. ஆப்ரகாம், பரிணாமம், ப-2
2. நன்னூல், நூற்பா-462(இணையம்)
3. காதாசப்தசதி,பாடல்-53
4. திறனாய்வு கலை, தி.சு.நடராசன்,ப-224
5. காதாசப்தசதி,பாடல்-245
6. மூன்று பாலினங்கள்,ப-8
7. காதாசப்தசதி,பாடல்-373
8. மேலது,பாடல்-404
9. மேலது,பாடல்-49

## துணையன்கள்

1. ஆப்ரகாம்,எஸ்.(1971 மு.ப) பரிணாமம்.கல்லூரி நூல் வெளியீட்டு இயக்குநரகம்: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
2. நடராசன்,தி.சு. (2018 பன்னிரெண்டாம் பதிப்பு) திறனாய்வுக் கலை.சென்னை:பாவை பிரிண்டர்ஸ்.
3. பஞ்சாங்கம்,க. (2016 இ.ப) இலக்கிய திறனாய்வும் கோட்பாடும்.தஞ்சாவூர்:அன்னம் ,
4. பிரேம்குமார்,கோ,(2008 மு.ப) மூன்று பாலினங்கள்.சென்னை:புதுப்புனல்,
5. ஜகந்நாத ராஜா,மு.கு.(1981 மு.ப) காதா சப்த சதி தமிழாக்கம்.இராஜபாளையம்:விசுவசாந்தி பதிப்பகம்,